டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 18.09.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 076 | Madurai | Online Edition

# நீலகிரி, கோவையில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, செப்.17

தமிழகத்தில் நீலகிரி, கோவை மாவட்டங்களில் இன்று (செப்.18) ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், மராத்வாடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியிலிருந்து மன்னார் வளைகுடா வரை, உள் கர்நாடகா மற்றும் தமிழக பகுதிகள் வழியாக சுமார் 0.9 கிமீ உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (செப்.18) நீலகிரி, கோவை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், ராணிப் பேட்டை, வேலூர், திருப்பத்தூர், சேலம், திருப்பூர், ஈரோடு, தர்மபுரி, நாமக்கல், மதுரை, சிவகங்கை, கிருஷ்ணகிரி, கள்ளக் குறிச்சி, கடலூர், பெரம்பலூர், அரியலூர், கரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். இதர தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

செப்.19-ம் தேதி நீலகிரி, கோவை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், ராணிப் பேட்டை, கள்ளக்குறிச்சி, சேலம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங் களில் ஒரு சில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த

காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் இதர வட தமிழக மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தென் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

செப்.20, 21 தேதிகளில் நீலகிரி, கோவை, திண்டுக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும். இதர வட தமிழகத்தில் ஒருசில இடங்களில் மிதமான மழையும், இதர தென் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

செப்.22, 23 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களில் மிதமான மழையும், இதர தமிழக மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று (செப்.18) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சிறுதானிய பயிர் சாகுபடி குறித்து திருவண்ணாமலை மாவட்டத்திற்கு பட்டறிவு பயணம்

சேலம், செப்.17

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் வட்டாரத்தில், அட்மா திட்டத்தின் கீழ் உள் மாநில அளவிலான பட்டறிவு பயணம் திருவண்ணாமலை மாவட்டம் அத்தியந்தலில் அமைந்துள்ள சிறுதானிய பயிர்கள் மகத்துவ மையத்தை கண்டு தொழில் நுட்பங்கள் அறிந்து வர விவசாயிகள் 40 பேர் அழைத்துச் செல்லப்பட்டனர்.




சிறுதானிய மகத்துவ மைய தலைவர் மற்றும் பேராசிரியர் வைத்தியலிங்கம், சிறுதானிய பயிர் சாகுபடியின் முக்கியத்துவம், அதன் பயன்கள் குறித்தும், அதனை மதிப்பு கூட்டி விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகள் அதிக வருமானம் பெறலாம் என விளக்கமளித்தார். இணை பேராசிரியர் சரவணன், சிறுதானிய பயிர்களை தாக்கும் பூச்சி மற்றும் நோய்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். உழவியல் பேராசிரியர் அய்யாதுரை, உழவியல் பயன்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார்.

மேலும் கலசப்பாக்கம் வட்டாரம், மோட்டூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ காமாட்சி அம்மன் சிறுதானிய பயிர் சாகுபடி உற்பத்தியாளர் சங்க பயிற்சியாளர் கார்த்திகேயன் அவர்களை நேரில் சந்தித்து சிறுதானிய பயிர் சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டும் பொருள்கள் செய்ய பயன்படுத்தும் இயந்திரங்கள், செய் முறைகள் குறித்து அறிந்து பயனடைந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**41. மல்டி வெஜிடபிள் சூப்**

**தேவையான பொருட்கள்**

கேரட் — ¼ கப்

பீன்ஸ் — ¼ கப்

பட்டாணி — ¼ கப்

காலிஃப்ளவர் — ¼ கப்

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை :** அனைத்து காய்கறிகளையும் வேக வைத்து மிளகு, உப்பு சேர்த்து பரிமாறவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

நாளை தொடரும்...



# பட்டியலின (SC) மாணவர்களுக்கான வருமானம் ஈட்டும் காளான் வளர்ப்பு பயிற்சி



கோயம்புத்தூர், செப்.17

புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் 'அனைத்திந்திய ஒருங் கிணைந்த காளான் மேம்பாட்டுத் திட்டத்தின்' (All India Coordinated Mushroom Improvement Project) நிதியுதவி உடன், கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தாவர நோயியல் துறை சார்பில், கோயம்புத்தூர் கோவை கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த 50 பட்டியலின மாணவர்களுக்கு 'காளான் வளர்ப்பின் மூலம் கூடுதல் வருமானம் ஈட்டுதல் குறித்த ஒரு நாள் பயிற்சி 16.09.26 அன்று நடத்தப்பட்டது. இத்திட்டம் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் க.அங்கப்பனின் வரவேற் புரையுடன் தொடங்கியது. அவர், செங்குத்து இடவசதியைப் பயன் படுத்துவதன் மூலம் குறைந்த பரப்பளவில் அதிக வருமானம் தரக்கூடிய ஒரு நவீன தோட்டக்கலைத் தொழிலாக காளான் வளர்ப்பு விளங்கு வதையும், இது மாணவர் சமூகத்தின் சமூக-பொருளாதார வாழ்வா தாரத்தை மேம்படுத்தும் என்பதையும் வலியுறுத்திக் கூறினார். பயிர் பாதுகாப்பு மையத்தின் இயக்குனர் முனைவர் மூ.சாந்தி தனது சிறப்புரையில், காளான் உற்பத்தியின் முக்கியத் துவம், அதன் ஊட்டச்சத்து மதிப்புகள் மற்றும் கூடுதல் வருமானம் ஈட்டுவதற்கான மதிப்புக் கூட்டல் நன்மைகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும், இளைஞர்களிடையே சுயவேலைவாய்ப்பு வாய்ப்புகளை உருவாக்கும் வகையில், வளர்ந்து வரும் தொழில்முனைவோருக்கு தேவையான தொழில்நுட்ப ஆதரவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வழங்கும் என்று குறிப்பிட்டார். இத்திட்டத்தின் பேராசிரியரும் திட்ட அதிகாரியுமான முனைவர் கு.திரிபுவனமாலா, 'கற்றல் காலத் திலேயே வருமானம் ஈட்டுதல்' என்ற நோக்கத்தின் அடிப்படையில் அதிக இளம் காளான் தொழில்முனைவோரை உருவாக்குவதன் அவசியத்தையும், சிப்பி காளான் வளர்ப்பு குறித்த செயல்முறை விளக்கங்களையும் பயிற்சியையும் வழங்கினார். உதவிப்பேரா சிரியர் முனைவர் ப.மகாலட்சுமி, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, இயற்கைச் சூழல் உத்திகள் குறித்த தகவல்களை வழங்கினார். காளான் உற்பத்திக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

# தூய்மை பாரத இயக்கம் - 2026



புதுக்கோட்டை, செப்.15

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் (ICAR) புதுதில்லியின் கீழ் புதுக்கோட்டை மாவட்டம், வம்பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் நிலையத்தில் தூய்மை பாரத இயக்கம் (Swachhta Hi Seva Campaign) என்ற நிகழ்ச்சியானது 17.9.26 முதல் 2.10.26 வரை பல்வேறு தூய்மை மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுடன் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கமானது விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே தூய்மை, சுகாதாரம், தனிநபர் சுகாதாரம், முறையான கழிவு மேலாண்மை மற்றும் சுற்றுப்புறச் சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். இந்த இயக்கத்தின் முதல் நாள் நிகழ்ச்சியானது 17.9.26 வேளாண் அறிவியல் நிலையம் வம்பனில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை இந்த நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் மு.தமிழ்ச்செல்வன், தொடங்கி வைத்து தூய்மை பாரத இயக்கம் மற்றும் தூய்மையே சேவை என்ற கருத்தின் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்து, மேலும் தூய்மையை பேணுவது அரசு நிறுவனங்களின் பொறுப்பு மட்டுமல்ல ஒவ்வொரு தனிநபர் மற்றும் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பாகும் என்பதையும் அவர் கூறினார்.

மேலும் இந்த இயக்கமானது விவசாய நிலங்கள், அலுவலக வளாகங்கள், கிராமப்புறங்கள் மற்றும் பொது இடங்களை தூய்மையாக பராமரித்தல், குப்பைகளை கண்ட இடங்களில் கொட்டுவதை தவிர்த்தல், நெகிழி பயன்பாட்டை குறைத்தல் மற்றும் கழிவுப்பொருட்களை தரம் பிரித்து முறையாக அகற்றி சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல் அவற்றின் அவசியத்தையும் எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் நிலையத்தின் அனைத்து தொழில்நுட்ப வல்லுநர்களும், அலுவலர்களும் மற்றும் பணிய–ாளர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பல்வேறு தூய்மை மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றின் அவசியத்தை பற்றி விவசாயிகளுடைய கூறினார்கள். இந்த இயக்க நடவடிக்கைகள் மூலம் விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே தூய்மை, சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக பங்களிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# போர்டுலாகா பூச்செடி வீட்டில் வளர்ப்பது மற்றும் பராமரிப்பு முறை

போர்டுலாகா (Portulaca grandiflora) குறைந்த நீரில் நன்கு வளரும், அதிக சூரிய ஒளியை விரும்பும் அழகான பூச்செடியாகும். வீட்டுத் தோட்டம், பூந்தொட்டி, பூங்கா மற்றும் எல்லைப் பகுதிகளில் வளர்க்க ஏற்றது. வீட்டில் வளர்ப்பதற்கு மிகவும் எளிதான பூச்செடி. அதிக வெயில் கிடைத்தால் நிறைய பூக்கள் பூக்கும்.



**1. தொட்டி தேர்வு**

8–12 அங்குல தொட்டி போதுமானது. அடிப்பகுதியில் தண்ணீர் வெளியேறும் துளைகள் இருக்க வேண்டும். ஒரே தொட்டியில் 2–3 செடிகள் நடலாம். செடிகளுக்கு இடைவெளி விடவும்.

**2. மண் கலவை**

**வீட்டில் எளிதாக தயாரிக்க :** மண் : மணல் : கம்போஸ்ட் = 2 : 1 : 1 என்ற விகிதத்தில் கலந்து பயன்படுத்தலாம். முக்கியமாக, தொட்டியில் தண்ணீர் தேங்கக்கூடாது. போர்டுலாகாவிற்கு நல்ல வடிகால் மிகவும் முக்கியம்.



**3. சூரிய ஒளி**

தினமும் 5–6 மணி நேரம் நேரடி சூரிய ஒளி கிடைக்குமாறு வைக்கவும். காலை முதல் மதியம் வரை வெயில் கிடைக்கும் இடம் சிறந்தது. வெயில் குறைவாக இருந்தால் செடி வளர்ந்தாலும் பூக்கள் குறையலாம்.

**4. தண்ணீர் ஊற்றுவது**

போர்டுலாகாவிற்கு அதிக தண்ணீர் தேவையில்லை. மேல்மண் காய்ந்த பிறகு தண்ணீர் ஊற்றவும். பொதுவாக 2–3 நாட்களுக்கு ஒருமுறை என்பது ஒரு தொடக்க வழிகாட்டி; வெயில், மண் மற்றும் தொட்டியின் அளவைப் பொறுத்து இடைவெளி மாறும். தினமும் கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீர்

தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். இலைகள் சற்று சதைப்பற்றுடன் இருப்பதால், அதிக நீர் ஊற்றுவது வேர் அழுகலை ஏற்படுத்தலாம்.



**5. உரம்**

**மாதத்திற்கு ஒரு முறை :** சிறிதளவு மண்புழு உரம் அல்லது நன்கு மக்கிய கம்போஸ்ட் சேர்க்கலாம். பூக்கள் அதிகமாக வேண்டும் என்பதற்காக அதிக நைட்ரஜன் உரம் கொடுக்க வேண்டாம். அதிக இலை வளர்ச்சியும் குறைந்த பூப்பிடிப்பும் ஏற்படலாம்.

**6. பராமரிப்பு**

காய்ந்த பூக்களை அவ்வப்போது அகற்றவும். அதிகமாக நீண்டு வளரும் தண்டுகளை லேசாக வெட்டினால் கிளைகள் அதிகரிக்கும். களைகளை அகற்றி, செடிகளுக்கு நல்ல காற்றோட்டம் கிடைக்கச் செய்யவும். வெட்டிய ஆரோக்கியமான தண்டுகளை மீண்டும் நட்டு புதிய செடிகளை உருவாக்கலாம். பூந்தொட்டிகளில் நல்ல வடிகால் அவசியம்.

**7. நிறைய பூக்கள் வர 5 முக்கிய விசயங்கள்**

அதிக வெயில்
குறைந்த /தேவையான அளவு நீர்
நல்ல வடிகால்
மிதமான உரம்
காய்ந்த பூக்கள் மற்றும் நீண்ட கிளைகளை அகற்றுதல்

இவற்றை சரியாகச் செய்தால் போர்டுலாகா தொட்டி முழுவதும் பரவி அழகாகப் பூக்கும்.



தொகுப்பு :
*கா. அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். 82480 80922.*

# பருத்தியில் அதிக மகசூல் பெற தரமான விதைகளை பயன்படுத்த வேண்டும்



விருதுநகர், செப்.17

விருதுநகர் மாவட்டத்தில் மானாவாரி பயிராக அதிகளவில் அருப்புக் கோட்டை, ம.ரெட்டியபட்டி, விருதுநகர், சிவகாசி, வெம்பக் கோட்டை, சாத்தூர் மற்றும் திருவில்லிபுத்தூர் வட்டாரங் களில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகள் பெரும்பாலும் தனியார் நிறுவனங்களின் வீரிய ஒட்டு ரக பருத்தி விதைகளை பயன்படுத்துவதால் அதிக மகசூல் பெற விதைகளின் தரத்தை நன்கு ஆராய்ந்து அதிக முளைப்புத்திறன் உள்ள விதைகளையே பயன்படுத்த வேண்டும்.

விவசாயிகள் விதைப்பைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதைத்தர விபரத்தில் உள்ள விதை சுத்தத்தன்மை மற்றும் முளைப்புத்திறன் போன்றவற்றை சரிபார்த்து வாங்க வேண்டும். வீரிய பருத்திக்கு 75 சதவீதமும், ரகப்பருத்திக்கு 65 சதவீதமும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் பயிர் எண்ணிக்கையை சரியான அளவில் பராமரித்து அதிபட்ச மகசூல் பெற இயலும்.

எனவே தற்போது பருவமழை துவங்கியுள்ளதால் பருத்தி பயிர் செய்யும் விவசாயிகள் அதிகமான மகசூல் பெற விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் செயல்படும் விதைப் பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- செலுத்தி விதை முளைப்புத்திறனை அறிந்து கொள்ளலாம்.

பருத்தி விதைகளை அமில முறையில் பஞ்சு நீக்கம் செய்து விதைக்கும்போது பயன்படுத்தலாம். ஒரு கிலோ விதையினை உலர்ந்த பிளாஸ்டிக் வாளியில் சுமார் 100 மி.லி அடர் கந்தக அமிலத்தை ஒரே சீராக ஊற்றி 2 அல்லது 3 நிமிடம் ஒரு குச்சி கொண்டு ஒரே மாதிரியாக நன்கு கலக்கும் போது பருத்தியின் மேல் உள்ள பஞ்சு நீங்கி விதை காப்பிகொட்டை நிறத்திற்கு வந்த பின்னர் விதைகளை தண்ணீர் விட்டு 5 அல்லது 6 முறை அமிலம் நீங்கும்படி நன்கு கழுவி கடைசி முறை கழுவும் பொழுது நீரின் மேலாக மிதக்கும் பொக்கு விதை, பூச்சி தாக்குதலுக்கு உண்டான விதை, மிகச் சிறிய விதை, சீராக முற்றாத விதைகளை எடுத்து விட்டு பின்பு நன்கு முற்றிய விதைகளை நிழலில் உலர்த்தி பின்பு வெய்யிலில் உலர்த்தி பயன்படுத்த வேண்டும். இவ்வாறு பிரித் தெடுத்த விதைகளை பிவேரியா பேசியானா, பேசில்லஸ் சப்டிலிஸ்

மற்றும் டிரைகோடெர்மா அஸ்பெரில்லம் ஆகிய உயிர் மருந்துகளை ஒரு கிலோ விதைக்கு ஒவ்வொன்றும் 10 கிராம் என்ற அளவில் கலந்து விதைப்பதன் மூலம் சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் மண் மூலம் பரவும் நோய்களிலிருந்து பயிர்களை பாதுகாத்து விதைகளின் முளைப்புத்திறனை அதிகரிக்கலாம்.

எனவே பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக மகசூல் மற்றும் அதிக வருமானம் பெற விதைப்பரிசோதனை செய்தும், விதை நேர்த்தி செய்தும் விதைப்பு செய்ய வேண்டும் என மதுரை விதைப்பரிசோதனை அலுவலர் சிவகாமி, விருதுநகர் வேளாண் அலுவலர்கள் ஜானகி மற்றும் சாய்லெட்சுமி சரண்யா ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.



# இனி பெண்களும் பனை மரம் ஏறலாம்? எப்படி?



தமிழகத்தின் மாநில மரமான பனை மரம் அடி முதல் நுனி வரையிலும் மக்களுக்கு பயன்படுவதால் இதனை 'கற்பக தரு' என்று போற்றுகின்றனர். பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீர், நுங்கு, பனம்பழம், பனங்கிழங்கு சிறந்த இயற்கை உணவாகவும் பனை ஓலை, பனை நார் கூரைவேயவும், கூடை, கட்டில், முறம் போன்றவற்றை தயாரிக்கவும் பயன்படுகிறது.

**பனை மரங்கள்**

பனைமரம் செங்குத்தாக அதிக உயரமாக இருப்பதால், இதில் ஏறுவது கடினமானது. பல ஆண்டுகளாக பனைத் தொழிலாளர்கள் தங்களது உடல் வலிமையையும் அனுபவத்தையும் பயன்படுத்தியே மரங்களில் ஏறி வருகின்றனர். பனை மரத்தின் உயரம், அதிகமாக இருக்கும் போது ஏறும் தொழிலாளர்களுக்கு உடல் சோர்வு ஏற்படுவதும் பாதுகாப்பு குறித்த அச்சமும் உள்ளது. இதனால் இன்றைய இளைய தலைமுறையினர் மரம் ஏறுவதை விரும்பவில்லை. பனை மரங்கள் ஒரு சில இடங்களில் பராமரிக்க கூட முடியாத நிலை உள்ளது.

**மரம் ஏறும் இயந்திரம்?**

இதனை கருத்தில் கொண்டு பனை மரத்தில் எளிதாகவும் பாதுகாப்பாகவும் ஏறும் வகையில் கிள்ளிக்குளம் பனை ஆராய்ச்சி மையமும் வேளாண்மை கல்லூரியும் இணைந்து பனை ஏறுவதற்கான புதிய இயந்திரத்தை உருவாக்கி உள்ளனர்.

**இயந்திரத்தின் செயல்பாடு எப்படி?**

ஹைட்ராலிக் (HYDROLYIC) முறையில் பயன்படுத்திட படும் நவீன இயந்திரம் டிராக்டர் உதவியுடன் இணைத்து பனை மரத்தில் பயமில்லாமல் ஏற உதவுகின்றன. பனை மரங்களின்

அருகில் எடுத்து சென்று மேலும் கீழும் செல்லுமாறு இயக்கலாம். இதை பயன்படுத்தி ஒருவர் எளிதாக பனை மரத்தின் உச்சி வரை சென்று விடலாம். மரம் ஏறத் தெரியாதவர்கள் கூட எளிதாக இதை பயன்படுத்திடலாம். இந்த இயந்திரத்தை ஒரு மணி நேரத்திற்கு இயக்க 3 முதல் 4 லிட்டர் டீசல் செலவாகும். இந்த இயந்திரம் மூலமாக சுமார் 45 அடி உயரம் வரையிலான பனை மரத்தில் கூட பாதுகாப்பாக ஏறலாம்.

**இதனால் என்ன பயன்?**

பனைமரம் ஏறுவது ஆண்களே என்ற நிலையை மாற்றி, இனி மேல் பெண்களும் பாதுகாப்பாக இந்த இயந்திரத்தின் மூலமாக ஏறலாம்.

பாரதி கண்ட புதுமை பெண்களாக, ஆண்களுக்கு நிகராக பெண்களும் சரிநிகர மரம் ஏறலாம். முறையான பயிற்சியுடன் பெண்களும் பனை சார்ந்த தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை இந்த இயந்திர ஏணி உருவாக்கபட்டுள்ளது. பனை மரத்தையும் பனைத்தொழிலையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் முயற்சியில் கிள்ளிக்குளம் பனை ஆராய்ச்சி மையம் சிறப்பாக செயல்படுகிறது என்றால் மிகையல்ல.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# பிரதமர் மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு இப்கோ விவசாயிகள் கருத்தரங்கம்

சென்னை, செப்.17

பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாட்டின் அரியலூர், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தர்மபுரி, விருதுநகர், கடலூர், தஞ்சாவூர், மதுரை, திருவண்ணாமலை, நாகப்பட்டினம், ஈரோடு, பெரம்பலூர், கோயம்புத்தூர், தென்காசி, திருச்சி, கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி, சேலம், செங்கல்பட்டு மற்றும் நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் இப்கோ விவசாயிகள் கருத்தரங்குகள் நடைபெற்றன. இக்கருத்தரங்குகளில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சிகளின் வாயிலாக, பிரதமரின் விவசாய செழுமை மையம் (PMKSK) மூலம் விவசாயிகளுக்கு உரங்கள், விதைகள், மண்பரிசோதனை மற்றும் வேளாண் ஆலோசனைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் ஒரே இடத்தில் கிடைப்பது குறித்து எடுத்துரைக் கப்பட்டது. PMKSK மையங்களை விவசாயிகளின் தேவைகளுக் கான ஒருங்கிணைந்த சேவை மையங்களாகப் பயன்படுத்துவதன் முக்கியத்துவமும் விளக்கப்பட்டது. மேலும், சமச்சீர் உரப்பயன்பாடு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் பயிர் உற்பத்தித்திறனை மேம் படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. குறிப்பாக, இப்கோ நானோ யூரியா பிளஸ் மற்றும் இப்கோ நானோ டி.ஏ.பி. ஆகியவற்றின் பயன்பாடு, பயன்கள் மற்றும் அறிவியல் அடிப்படையிலான உர மேலாண்மை முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

இக்கருத்தரங்குகள் மூலம் நவீன வேளாண் தொழில் நுட்பங்கள், சமச்சீர் உரப் பயன்பாடு மற்றும் நிலையான வேளாண் நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடம் ஏற்படுத்துவதுடன், வளமான மண், மேம்பட்ட பயிர் உற்பத்தி மற்றும் நிலையான விவசாய வளர்ச்சியை நோக்கிய முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மரம் நடும் விழா நடந்தது

விழுப்புரம், செப்.17

**மரம் தங்கசாமி நினைவு நாளில் காவேரி கூக்குரல் சார்பில் 1 லட்சத்து 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன.**




மர ஆர்வலரான தங்கசாமி ஐயாவின் நினைவு நாளை முன்னிட்டு காவேரி கூக்குரல் மூலம் தமிழகம் முழுவதும் 1,10,000 க்கும் மேற்பட்ட டிம்பர் மரக்கன்றுகள் நடப்பட்டன.

மரம் தங்கசாமி அவர்களின் நினைவு நாளான செப்டம்பர் 16 அன்று மரங்கள் நடுவதை விவசாயிகள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் டிம்பர் மரங்கள் சாகுபடி செய்வதில் விவசாயிகளுக்கு முன்னோடியாக திகழ்ந்தவர் மரம் தங்கசாமி ஐயா, தனது வாழ்நாள் முழுவதும் டிம்பர் மர சாகுபடியை பிரபலப்படுத்தியவர். மரம் சார்ந்த விவசாயம் காலத்தின் கட்டாயம் என விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி எண்ணற்ற விவசாயிகளை மரம் சார்ந்த விவசாயத்திற்கு மாற்றியவர். ஈஷாவின் ஆரம்பகால இயக்கமான பசுமைக் கரங்கள் திட்டத்துடன் இணைந்து பலகாலமாக செயல்புரிந்தவர்.

அவரது நினைவு நாளை சிறப்பிக்கும் வகையில் காவேரி கூக்குரல் மூலமாக தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் உள்ள 111 விவசாய நிலங்களில், 497 ஏக்கர் நிலப்பரப்பில் மொத்தம் 1,10,906 டிம்பர் மரக்கன்றுகள் நடப்பட்டன.

ஈஷாவின் தொடர் முயற்சிகளின் மூலம் தோராயமாக 13.3 கோடி மரங்கள் நடப்பட்டுள்ளன.

மேலும், தமிழகத்தின் அனைத்து கிராமங்களிலும் அரச மரங்களை நடும் நோக்கில், பேரூர் மற்றும் தருமை ஆதீனங்களுடன் இணைந்து அரச மரக்கன்றுகள் நடும் பணியையும் காவேரி கூக்குரல் செயல் படுத்தி வருகிறது. இந்த ஆண்டு தமிழ்நாட்டில் மட்டும் 1.20 கோடி மரங்கள் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக் கப்பட்டுள்ளது. இதுவரை 39,37,000 மரங்கள் நடப்பட்டு உள்ளன.

### மரம் சார்ந்த விவசாயத்தை ஊக்குவிக்கும் காவேரி கூக்குரல்

மரம் சார்ந்த விவசாயம் செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை காவேரி கூக்குரல் செய்து வருகிறது. தேக்கு, மலைவேம்பு, கருமருது, வேங்கை, மஞ்சள் கடம்பு, சந்தனம், செஞ்சந்தனம், குமிழ், மகாகனி போன்ற டிம்பர் மரங்களை விவசாயிகளுக்கு மலிவு விலையில் வழங்கி மர விவசாயம் செய்ய ஊக்குவிக்கிறது. இந்த டிம்பர் மரங்களை விவசாய நிலங்களில் நட்டு வளர்ப்பதன் மூலம் விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கும்.

மேலும், மரங்களை வெட்டாமலே வருமானம் தரக்கூடிய வழிமுறைகளையும் காவேரி கூக்குரல் விவசாயிகளுக்கு பயிற்றுவிக்கிறது. டிம்பர் மரங்கள் 3 முதல் 5 வருடங்கள் வளர்ந்தபின், சமவெளிப் பகுதிகளில் காய்க்கக்கூடிய கரிமுண்டா மற்றும் பன்னியூர் மிளகு ரகங்களை ஊடுபயிராக மரங்களின் மீது வளர்ப்பதன் மூலம் தொடர் வருமானம் பெற முடியும். ஈஷா மூலம் பயிற்சி பெற்ற எண்ணற்ற விவசாயிகள் தற்போது மிளகு மூலம் வருமானம் பெறுகின்றனர். மேலும் விவசாயிகளுக்கு ஊடுபயிர் சாகுபடி, உணவுக்காடு வளர்ப்பு, பழங்கள் மதிப்புக்கூட்டுதல், ஜாதிக்காய் மற்றும் நறுமணப்பயிர் சாகுபடி குறித்த பல்வேறு பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் விவசாயிகள் வருமானத்தை அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகளை பெறுகிறார்கள்.

தமிழகம் முழுவதும் உள்ள ஈஷா நாற்றுப்பண்ணைகளில் விவசாயிகளுக்கு 5 ரூபாய்க்கு டிம்பர் மரக்கன்றுகள் வழங்கப் படுகின்றன. மரக்கன்றுகளைப் பெறவும், மண்ணுக்கேற்ற மரங்கள் குறித்த ஆலோசனைகள் பெறவும், காவேரி கூக்குரல் மூலம் நடத்தப்படும் பயிற்சிகளில் பங்கேற்கவும் 80009 80009 எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை வீ.விமல்ராஜ், களப்பணியாளர் ஏற்பாடுகளை செய்திருந்தார்.

# வேளாண்மை ஆராய்ச்சி நிலைய வல்லுநர் விதை உற்பத்தி திடலில் கண்காணிப்புக்குழு ஆய்வு மற்றும் விதைச்சான்று அலுவலர்களுக்கான பயிற்சி




ஈரோடு, செப்.17

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் ஒவ்வொரு ஆண்டும் உயர் விளைச்சல் தரும் பயிர் இரகங்களைக் கண்டறிந்து வெளியிட்டு வருகின்றது. அவ்வாறு வெளியிடப்பட்ட உயர் விளைச்சல் இரகங்களின் கருவிதைகளைக்கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் விதைப்பண்ணைகள் அமைத்து வல்லுநர் விதை உற்பத்தி செய்து மாநில அரசு விதைப்பண்ணைகளுக்கு விதைபெருக்கத்திற்காகவும் விவசாயிகளுக்கு சாகுபடிக்காகவும் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு அமைக்கப்படும் விதைப்பண்ணைகளை ஆய்வு செய்து வயல் ஆய்வு தரத்தினை துல்லியமாக கடைபிடித்து தரமான விதைகளை உற்பத்தி செய்வதை உறுதி செய்திடும் பொருட்டு வல்லுநர் விதை உற்பத்தி கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு உள்ளது. இக்குழுவானது விதைப்பயிர் பூப்பருவம், அறுவடைப்பருவம் மற்றும் விதைக்குவியல், விதை சுத்தி ஆகிய நிலைகளில் ஆய்வு செய்து விதைத் தரத்தினை உறுதி செய்கின்றது.

இந்நிலையில் நடப்பு பருவத்தில் பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நெல் பயிரில் ஏடிடி 37 இரகம், உளுந்து பயிரில் வம்பன்10,11 இரகங்கள், பச்சைப்பயரில் கோ 9, நிலக்கடலை பயிரில் வி ஆர் ஐ 10ஆகிய இரகங்களில் வல்லுநர் நிலை விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு விதைப்பண்ணை பயிர் பூப்பருவம் மற்றும் அறுவடைப் பருவத்தில் உள்ளது. இவ்விதைப்பண்ணைகளை பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மணிவண்ணன், உதவி பேராசிரியர்கள் சாந்தி, உத்தராசு,

ஈரோடு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் மா.சத்தியராஜ், மற்றும் ஈரோடு மாவட்டத்தின் அனைத்து விதைச்சான்று அலுவலர்கள் அடங்கிய வல்லுநர் விதை உற்பத்தி கண்காணிப்புக்குழு ஆய்வு செய்தது. ஆய்வின் போது விதைப்பயிரில் பிற இரக கலவன்கள், பயிர் விலகு தூரம், குறித்தறிவிக்கப்பட்ட நோய்கள், பரப்பு மதிப்பீடு, எதிர்பார்க்கப் படும் மகசூல் போன்றவற்றையும் ஆய்வு செய்தனர். மேலும் தரமான வல்லுநர் விதைகளை உற்பத்தி செய்திட தேவையான அனைத்து நடைமுறைகளையும் கடைபிடிக்க களப்பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.




# ஆடு வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி




கள்ளக்குறிச்சி, செப்.17

இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், வேளாண் அறிவியல் நிலையம் (விழுப்புரம் II), கள்ளக் குறிச்சியில் ஆடு வளர்ப்பின் அடிப்படைகள் ஆரோக்கியமான ஆடுகள், அதிக வளர்ச்சி மற்றும் சிறந்த இலாபம் என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி 16.09.26 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 51 விவசாயிகள், கிராமப்புற பெண்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

பயிற்சியை மருத்துவர் பா.வினோத், தொழில்நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்) ஒருங்கிணைத்தார். சேலம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் அ.இளங்கோ, தலைமையேற்று, ஆடு வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத் துவம் குறித்து உரையாற்றினார்.

நிலையத்தின் தலைவர் முனைவர் மொ.ச.கண்ணதாசன், முன்னிலை வகித்து, அறிவியல் முறையிலான ஆடு வளர்ப்பு மூலம் சிறந்த வருமானம் பெறுவதற்கான வாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தார்.

பயிற்சியில் ஆட்டுக் கொட்டகை மேலாண்மை, உயிர்ப ாதுகாப்பு நடவடிக்கைகள், சமச்சீர் தீவன மேலாண்மை, இனப்பெருக்க மேலாண்மை, நோய்கள் மேலாண்மை, குடற்புழு மற்றும் ஒட்டுண்ணி கட்டுப்பாடுகள், பொருளாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல், ஆட்டு இறைச்சி மதிப்புக்கூட்டுதல் உள்ளிட்ட தலைப்புகளில் முனைவர் முரளி, விஜயகுமார், மகேஸ்வரன், மங்கலதேவி, லாவண்யா, தீபிகாகிருஷ்ணவேணி, தாவூத் இப்ராஹிம் மற்றும் ஸ்ரீமதி உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களால் விளக்கங்கள் வழங்கப்பட்டன. ஆடு வளர்ப்பில் முன்னோடி விவசாயி கௌதம், வெள்ளாடு வளர்ப்பில் தனது வெற்றிக் கதையைப் பகிர்ந்து கொண்டார்.

நிலையத்தில் பராமரிக்கப்படும் வெள்ளாடு கொட்டகை மாதிரி அலகு, அசோலா செயல்விளக்கத் திடல், மூலிகைத் தோட்டம்,

5 சென்ட் மாதிரி தீவனத் திடல் மற்றும் கண்காட்சிக்கூடம் உள்ளிட்ட அலகுகளை விவசாயிகள் பார்வையிட்டு விளக்கங்களைக் கேட்டறிந்தனர்.

இப்பயிற்சியின் இறுதியில் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் பங்கேற்ற விவசாயிகள் தங்களது ஆடு வளர்ப்பு தொடர்பான சந்தேகங்களை தொழில் நுட்ப வல்லுநர்களிடம் கேட்டு தேவையான ஆலோசனைகளைப் பெற்றனர். பயிற்சியின் ஏற்பாட்டுப் பணிகளை ரமணி, ரம்யா மற்றும் ரோஹித் உள்ளிட்ட பணியாளர்கள் மேற்கொண்டனர்.

இப்பயிற்சியின் மூலம் விவசாயிகள் ஆரோக்கியமான ஆடுகளை வளர்ப்பது, அதிக வளர்ச்சியைப் பெறுவது மற்றும் ஆடு பண்ணை வளர்ப்பில் சிறந்த இலாபத்தை ஈட்டுவதற்கான அறிவியல் தொழில்நுட்பங்களை அறிந்து கொண்டனர்.

இதனை, முனைவர் மொ. ச. கண்ணதாசன், இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், இ.வே.ஆ.க., வேளாண் அறிவியல் நிலையம் (விழுப்புரம் - II), காளசமுத்திரம், கள்ளக்குறிச்சி தெரிவித்தார்.

# வேளாண் அறிவியலாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கோயம்புத்தூர், செப்.17

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் வேளாண் இணை பேராசிரியர்களுக்கு, திறன் மேம்பாட்டுப் பயிற்சி 16.9.26 முதல் 18.9.26 வரை அளிக்கப்படுகிறது.

பயிற்சியை துவக்கி வைத்து பேசிய பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் செயல் துணைவேந்தர் முனைவர் மு.ரவீந்திரன், ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்கள், அறிவு மற்றும் தொழில்முறைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் மூன்று நாள் ஆசிரியர் மேம்பாட்டு பயிலரங்கில்மாணவர்களின் கல்வி வளர்ச்சி, நற்பண்புகள், திறன்கள் மற்றும் எதிர்காலத் தொழில் வாழ்க்கையை வடிவமைப்பதில் ஆசிரியர்களின் முக்கியப் பங்கு குறித்தும், புதுமையான கற்பித்தல் முறைகள் மற்றும் நவீன கற்றல் அணுகுமுறைகளைப் பின்பற்றுவதன் அவசியம் குறித்தும்,



உலகளாவிய தர நிலைகளையும், உருவாகி வரும் புதிய வாய்ப்பு களையும் எதிர் கொள்ளும் வகை யில் மாணவர்களைத் தயார்படுத்து வதற்குத் தேவையான நவீன கற்பித்தல் நுட்பங்கள் மற்றும் அணுகுமுறைகள் ஆகியவற்றை பேராசிரியர்களுக்கு வழங்கும் வகையில் இப்பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டு உள்ளதாக தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தனி அலுவலர் (வெளியீடுகள்) முனைவர் மா.இரா.சீனிவாசனின் சிறப்புரையில், பாரம்பரிய வகுப்பறை, கரும்பலகை அடிப் படையிலான கற்பித்தல் முறைகளைத் தாண்டி, கல்வித் துறையில் உருவாகி வரும் புதிய சிந்தனைகள் மற்றும் புதுமை யான அணுகுமுறைகளைப் பின்பற்றுவதன் அவசியத்தை இந்நிகழ்ச்சி வலியுறுத்தியது. ஆராய்ச்சிக்கான தெளிவான தரநிலை செயல்பாட்டு நடைமுறைகள் மற்றும் மாணவர்களின் மதிப்பீட்டிற்கான வெளிப்படையான, தெளிவான மதிப்பீட்டு அளவு கோல்கள் உருவாக்கப்பட வேண்டியதன் முக்கியத்து வத்தையும், அறிவியல் சிறப்பின் அடிப்படையாக நேர்மையான, மீண்டும் மேற்கொள்ளக்கூடிய மற்றும் தடமறியக்கூடிய ஆராய்ச்சி அமைய வேண்டும் என்றும், கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் கல்விசார் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில், ஆசிரியர்களுக்கு புதிய சிந்தனைகள், அனுபவங்கள் வழங்கப்பட உள்ளது என்றார். செயற்கை நுண்ணறிவு சார்ந்த கற்பித்தல் முறைகள், உயர்தர ஆராய்ச்சி முன்மொழிவுகளை உருவாக்குதல், விளையாட்டு அடிப்படையிலான கற்றல்மற்றும் வேளாண் விரிவாக்கத்தில் நுண்ணறிவு தொழில்நுட்பங்கள், இணையப் பாதுகாப்பு மற்றும் தரவு தனியுரிமை, கல்விசார் செயலிகள், உயர்தர ஆராய்ச்சி முன்மொழிவுகளை உருவாக் குதல், இந்தியக்கல்வி அமைப்பைப் புரிந்து கொள்ளுதல், கல்விசார் மேன்மைக்கான தர உறுதிப்பாடு, ஞ1தர அறிவியல் ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுவதற்கான உத்திகள், இந்தியக் கல்வி அமைப்பைப் புரிந்து கொள்ளுதல் ஆகிய தலைப்புகளில் இப்பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. வனவியல் துறை பேராசிரியர் மற்றும் பயிற்சிகள் ஒருங்கிணைப் பாளர் முனைவர் சு.உமேஷ்கண்ணா வரவேற்புரை யாற்றினார். பேராசிரியர் (ARM) முனைவர் த.சம்சாய் நன்றியுரையாற்றினார்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# பயறு வகைகளில் ரைசோபியம் உயிரி உரம் கொண்டு விதை நேர்த்தி செய்தல் குறித்த செயல்விளக்க பயிற்சி



விருதுநகர், செப்.17

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டாரத்தைச் சேர்ந்த சத்திரம் புளியங்குளம் கிராமத்தில், தானம் அறக்கட்டளை மற்றும் அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையம் (KVK) இணைந்து நடத்திய பயறு வகைகளில் ரைசோபியம் உயிரி உரம் மூலம் விதை நேர்த்தி செய்யும் சிறப்பு களப்பயிற்சி மற்றும் நேரடி செயல்விளக்க பயிற்சி வெற்றிகரமாக நடைபெற்றது. அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் மு.ராமசுப்பிரமணியன் தலைமை மற்றும் வழிகாட்டலிலும் மற்றும் பேராசிரியர் முனைவர் ந.ஆனந்தியின் தொழில்நுட்பப் விளக்கத்திலும் நடைபெற்ற இப்பயிற்சியில் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

பயிற்சியில், பயறுவகை பயிர்களில் ரைசோபியம் உயிரி உர விதை நேர்த்தியின் முக்கியத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைக் கப்பட்டது. பயறு பயிர்களின் வேர் முடிச்சுகளில் ரைசோபியம் பாக்டீரியாக்கள் பெருகி வளிமண்டல நைட்ரஜனை இயற்கை முறையில் சேமித்து தருவதால், ரசாயன உரங்களின் பயன்பாடு குறையும் என்றும், வேர் வளர்ச்சி தூண்டப்பட்டு பயிர் ஆரோக்கியமாக வளர்வதுடன் மகசூல் 10 முதல் 15 சதவீதம் வரை அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற செயல்விளக்கத்தில், ஒரு ஏக்கருக்கான உளுந்து அல்லது பாசிப்பயறு விதைகளுடன், 200 கிராம் ரைசோபியம் மற்றும் 100 மி.லி ஆறவைத்த அரிசிகஞ்சியை ஒட்டும் திரவமாகக் கலந்து, விதைகளின் தோல் சேதமடையாதவாறு சீராகப் பூசி, 15 முதல் 30 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி விதைப்பு செய்ய வேண்டும் என்று செயல்முறையாகக் காண்பிக்கப்பட்டது.

மேலும், உயர் விளைச்சல் தரும் உளுந்து மற்றும் பாசிப்பயறு இரகங்கள், விதை பெருக்க நிலைகள், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை உத்திகள் குறித்தும் விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 'பயறு ஒண்டர்' வளர்ச்சி ஊக்கியைத் தெளிப்பதன் மூலம் பூக்கள் உதிர்வது தடுக்கப்பட்டு திரட்சியான காய்களுடன் கூடுதல் மகசூல் பெறலாம் என்றும் வலியுறுத்தப் பட்டது. இக்களப்பயிற்சி தங்களுக்குச் சரியான நேரத்தில் அறிவியல் ரீதியான வேளாண் தொழில்நுட்பங்களைக் கற்றுத் தந்து, பயறு வகை பயிர்களில் அதிக மகசூல் பெறலாம் என்ற நம்பிக்கையை அளித்துள்ளதாகப் பங்கேற்ற விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# மக்காச் சோளத்தில் அதிக மகசூல் பெற தரமான விதைகளை பயன்படுத்த வேண்டும்



விருதுநகர், செப்.17

விருதுநகர் மாவட்டத்தில் மானாவாரி பயிராக அதிக அளவில் அருப்புக்கோட்டை, ம.ரெட்டியபட்டி, விருதுநகர், சிவகாசி, வெம்பக்கோட்டை, சாத்தூர் மற்றும் திருவில்லிபுத்தூர் வட்டாரங்களில் மக்கா சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விவ சாயிகள் பெரும்பாலும் தனியார் நிறுவனங்களின் வீரிய ஒட்டு ரக மக்காச்சோள விதைகளை பயன்படுத்துவதால் அதிக மகசூல் பெற விதைகளின் தரத்தை நன்கு ஆராய்ந்து அதிக முளைப்புத்திறன் உள்ள விதைகளையே பயன்படுத்த வேண்டும்.

விவசாயிகள் விதைப்பைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதைத்தர விபரத்தில் உள்ள விதை சுத்தத்தன்மை மற்றும் முளைப்புத்திறன்; போன்றவற்றை சரிபார்த்து வாங்க வேண்டும். மக்காச்சோளப் பயிருக்கு குறைந்தபட்சம் 90 சதவீத முளைப்புத்திறன் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் பயிர் எண்ணிக்கையை சரியான அளவில் பராமரித்து அதிபட்ச மகசூல் பெற இயலும்.

எனவே தற்போது பருவமழை துவங்கியுள்ளதால் மக்காச்சோளம் பயிர் செய்யும் விவசாயிகள் அதிகமான மகசூல் பெற விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் செயல்படும் விதைப் பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- செலுத்தி விதை முளைப்புத்திறனை அறிந்து கொள்ளலாம். மேலும் மக்காச்சோளம் பயிரில் படைப்புழு தாக்கு தலை கட்டுப்படுத்த கடைசி உழவின்போது ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இட்டு நடவு செய்வதன் மூலம் ஆரம்பகட்ட பூச்சித்தாக்குதலை தவிர்க்கலாம். மக்காச்சோள விதைகளை இயற்கை

முறையில் விதை நேர்த்தி செய்திட 80 கிராம் சூடோமோனஸ் ப்ளூரசன்ஸ் பொடியினை 100 மி.லி. நீரில் கலந்த கரைசலில் 12 மணி நேரம் ஊற வைத்து விதைப்பதால் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலில் இருந்து பயிரினைப் பாதுகாத்து விதை முளைப்புத் திறனை அதிகரித்து உயர் மகசூல் பெறலாம்.

எனவே மக்காச்சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக மகசூல் மற்றும் அதிக வருமானம் பெற விதைப்பரிசோதனை செய்தும், விதை நேர்த்தி செய்தும் விதைப்பு செய்ய வேண்டும் என மதுரை விதைப்பரிசோதனை அலுவலர் சிவகாமி, விருதுநகர் வேளாண்மை அலுவலர்கள் ஜானகி மற்றும் சாய்லெட்சுமி சரண்யா ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

